Registered as a Newspaper

G. C. E. A/L
Chemistry-திரு. மகாதேவா
Organic Chemistry
சனி, ஞாயிறு காலை 8.30
ஆரம்பம் 9-3-1986.
**Bond Institutes**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/-

A/L Day Class
11-30 - Botany-Mr. செல்வநேசன்
12-30 - Zoology Mr. சசன்
1-30 - Chemistry Mr. V. T. K.
2-30 - Physics Mr. நந்தகுமார்
3-30 - Physics Mr. நந்தகுமார்
4-30 - Pure/App. Mr. T. P. M.
**Bond Institutes**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு மாசி மீ 25 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 27 (09-03-1986) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:95



யாழ்ப்பாணத்தில் நேற்று ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள். முதலாவது படத்தில் ஊர்வலத்தில் கலந்து கொண்ட பெண்களில் ஒரு பகுதியினரைக் காணலாம். இரண்டாம், மூன்றும் படங்களில் ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஊர்திகளைக் காணலாம்.

வல்வையிலும் தொண்டமானாற்றிலும்

# போராளிகள் தாக்குதல்

## 2 சம்பவங்களில் 5 சிப்பாய்கள் பலி

வல்வெட்டித்துறை, மார்ச்.9

கடந்த வெள்ளியும் சனியும் வல்வெட்டித்துறை, தொண்டமானாறு பகுதிகளில் போராளிகள் தாக்குதல்களை நடத்தினார்கள். அவற்றில் ஐந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது

10 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர். வேறு சிலரைக் காணவில்லை என்றும் கூறப்பட்டது.

இது பற்றி அறியப்படுவதாவது:-

வெள்ளிக்கிழமை மாலை வல்வெட்டித்துறை முகாமில் இருந்து பருத்தித்துறை நோக்கி பிளாஸ்ரிக் வள்ளம் ஒன்றில் சென்று கொண்டு இருந்த இராணுவச் சிப்பாய்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தான் 5 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்றும் அறியப்படுகின்றது.

இச் சம்பவத்தில் எட்டு சிப்பாய்கள் படுகாயமடைந்தனராம். இன்னும் சில சிப்பாய்களைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

சம்பவம் நடந்த இடத்தில் கடற்படையினர் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர்.

படகின்மீது தாக்குதல் நடத்தப்பட்ட அதே வேளை இராணுவ முகாமில்இருந்து ஷெல் தாக்குதல் இடம்பெற்றது. அதன் பின்னர் போராளிகள் பின்வாங்கியதாகவும் சொல்லப்படுகிறது

நேற்று சனிக்கிழமை காலை நடந்த இன்னொரு தாக்குதலில் ஒரு சிப்பாய் மரணமானார் என்று

(4ஆம் பக்கம் பார்க்க)

### நயினாதீவில் கரை ஒதுங்கிய சிப்பாயின் சடலம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

நயினாதீவில் சென்ற திங்கட்கிழமை இடம்பெற்ற கடல்கண்ணி வெடிச் சம்பவத்தில் காணாமல் போன ஒரு சிப்பாயின் சடலம் வெள்ளிக்கிழமை காலை நயினாதீவில் கரை ஒதுங்கியது.

அவரது சடலம் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டது.

### வை.டபிள்யூ.சி.ஏ. திறப்பு விழாவில் கனேடிய தூதர்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் வை. டபிள்யூ. சி. ஏ. தலைமை அலுவலகத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும்.

இலங்கையில் உள்ள கனேடிய தூதுவர் திரு. டி. எம் கெலகட் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

### சுபநேரம்

9- 3- 1986
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.24 முதல் 10.54 வரை
ராகுகாலம்:
4.54 முதல் 6.24 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## கோப்பாய் -- கைதடி பாதையால் செல்லும் வாகனங்களுக்குச் சூடு!

நல்லூர், மார்ச் 9

கோப்பாய் — கைதடி தாம்போதி திருத்தி அமைக்கப்பட்ட பின்னர் அந்த வழியால் செல்லும் பிரயாணிகள் வாகனங்கள் மீது ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது.

இப்பகுதியில் ஹெலிக்கொப்டர் தாழப் பறந்து வாகனத்தில் செல்வோரைக் கிலிகொள்ளச் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மீண்டும் அனேகமான பிரயாணிகள் வாகனங்கள் பருத்தித்துறை வீதி வழியாகச் சென்று புத்தூர் சந்தியால் திரும்பிச் செல்கின்றன.

இதற்கிடையில் கோப்பாய் — கைதடி தாம்போதியைப் பயன்படுத்த வேண்டாம் என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மேலிடம் உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தாம்போதி கடந்த 2 ஆம் திகதி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும் பின்பு இளைஞர்களால் திருத்தப்பட்டதும் தெரிந்தவையே



முச்சந்தி முனி

சிவராத்திரியும் நல்ல நாளுமாய் காங்கேசன் இராமண்ணமாருக்கு இருந்தாப்போலை தெய்வ சிந்தனை வந்திருக்காக்கும். உப்பிடி எல்லாருக்கும் அது வந்தா எங்கடை கோயிலுகளாவது கொஞ்சம் தப்பும் . . . !

## இராணுவத்தினர் கீரிமலையில் நேற்று சிவன் வழிபாடு!

காங்கேசன்துறை, மார்ச் 9

தேரில் வந்த சிவனை கவச வாகனங்களில் வந்த சிப்பாய்களும் தரிசித்தனர்.

சிப்பாய்களின் பெரிய அதிகாரி, தட்சணை கொடுத்து அர்ச்சனை செய்துவித்து சிவனை வழிபட்டார்.

இது பற்றிய விவரமாவது;

கீரிமலை சிவன் கோயில் தேர்த்திருவிழா நேற்றுக் காலை இடம் பெற்றது.

சுவாமி தேரில் ஏறி ஐந்து நிமிடங்கள் சென்று இருக்கும். இரண்டு கவச வாகனங்களில் சிப்பாய்கள் நவீன ஆயுதங்களுடன் தேரின் பக்கத்தில் வந்து இறங்கினர்.

திரண்டு இருந்த பக்தர்கள் கூட்டம் ஆண்,பெண்,குழந்தைகள் உட்பட அனைவரும் சிப்பாய்களைக் கண்டு ஓட முயற்சித்தனர்.

சிப்பாய்கள் பக்தர்

(4ம் பக்கம் பார்க்க)

### நல்லுறவை கெடுக்க முயற்சி என்கிறார் தொண்டா

கொழும்பு, மார்ச் 9

ஜனாதிபதிக்கும் எனக்கும் உள்ள நல்லுறவைக் கெடுக்கச் சில தீயசக்திகள் முயல்கின்றன.

இப்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் சொன்னார்.

இ. தொ. கா. தேசிய மாநாட்டில் பேசுகையில் திரு. தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

# பெண்கள் தனித்து நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி

## ஊர்தியும் இடம்பெற்றது

— உதயன் செய்தியாளர் க. இரத்தினராஜசிங்கம் —

நல்லூர், மார்ச் 9

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியினர் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

இப் பேரணியில் ஆறு பெண்கள் அமைப்புகள் கலந்து கொண்டன.

ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இப் பேரணி நேற்றுக் காலை 10.30 மணி அளவில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் ஆரம்பித்து கோயில்வீதி, சிவன் வீதி, பலாலி வீதி, சேர். பொன். இராமநாதன் வீதி வழியாக பிரவுண் வீதியை அடைந்து பின்னர் பொற்பதி வீதியூடாக கோண்டாவில் சென்று – காங்கேசன்துறை வீதியூடாக இணுவில் கந்தசுவாமி கோயிலை அடைந்தது.

அங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றுடன் இப் பேரணி முடிவுற்றது.

சுமார் பத்து மைல் தூரம் கொண்ட இப் பேரணியில் மலையக மக்கள் சீருடையினரால் தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் சித்திரிக்கும் ஊர்தி ஒன்றும் எடுத்துச் செல்லப்பட்டது.

இப் பேரணியில் கலந்து கொண்ட அமைப்புகள் வருமாறு:-

ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி.

தமிழ் மகளிர் அவை.

சுதந்திரப் பறவைகள் அமைப்பு.

கிராமிய முற்போக்கு பெண்கள் அமைப்பு.

மக்கள் நற்பணி மன்றம்.

ஈழத் தாய்மார்கள் சங்கம் ஆகியன.

பேரணியின் முடிவில் இவ் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் அங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்தினார்கள்.

பேரணியில் கலந்து கொண்ட பெண்களில் பத்துப் பேரளவில் மயக்கம் அடைந்தனர்.

இவர்களுக்கு முதலுதவி சிகிச்சை வாகனத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அச்செழு வீதியில் இளைஞர் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 9

நேற்றுக் காலை அச்சுவேலி - அச்செழு வீதியில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

### கடத்தப்பட்ட லொறியில் பொருள்கள் அபகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 9

பொது மக்களுக்குரிய பொருள்களை ஏற்றி வந்ததாகக் கூறப்படும் லொறி ஒன்று பொருள்களுடன் பளைக்கு அருகில் புதுக்காட்டுச் சந்தியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டது.

7 ஆம் திகதி இந்தக் கடத்தல் இடம் பெற்றது.

அந்த லொறி வெறுமையாக நுணாவில் சந்தியில் கைவிடப்பட்ட நிலையில் உரிமையாளர்களினால் நேற்றுக் காலை கண்டு பிடிக்கப்பட்டது.

லொறியில்இருந்த ஒன்றரை லட்சம் ரூபா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலிக்கொப்டர் சூடு

### புன்னாலைக்கட்டுவன் கரந்தன் பகுதிகளில்

நல்லூர், மார்ச் 9

புன்னாலைக்கட்டுவன், கரந்தன் பகுதிகளில் நேற்றுக் ஹெலிக்கொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

இப்பகுதிகளுக்கு மேலால் பறந்து வந்த இந்த ஹெலிக்கொப்டர் வீதியால் சென்று கொண்டிருந்த வான் ஒன்றின் மீது தாழப்பறந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சுமார் பதினைந்துநிமிட நேரம் இப்பகுதிகளைச் சுற்றி வட்டமிட்ட பின்பு ஹெலிக்கொப்டர் பலாலிப் பக்கமாகப் பறந்து சென்றது.

## தூதுவர் டிக்ஸிற் ஜனாதிபதியை சந்திப்பார்

கொழும்பு, மார்ச் 9

இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. பெர்னாட் திலகரத்தினவும், இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் இந்தியாவிலிருந்து நேற்றுக் கொழும்பு வந்தனர்.

திரு. திலகரத்தின நேற்றுக் காலையில் கொழும்பு வந்து சேர்ந்தார். இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பகத்தின் பேச்சுக்கு இலங்கை தெரிவித்த ஆட்சேபத்தை இந்தியா கடுமையாக நோக்கியது. அது குறித்து, திரு. திலகரத்தின இந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ முகாமுக்கு சென்ற

## மின்சார ஊழியர் கடத்தப்பட்டு விடுதலை

வல்வெட்டித்துறை, மார்ச் 9

மின்சாரக் கோளாறைச் சரிப்படுத்துவதற்காக தொண்டமானாறு இராணுவ முகாமை நோக்கிச் சென்றவர்கள் கடத்தப்பட்டு பின்பு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

தொண்டமானாறு இராணுவ முகாமில் மின்சாரம் திடீரெனத் தடைப்பட்டது.

இதனைத் திருத்தும்படி மின்சார சபை நெல்லியடிக் கிளைக்கு அறிவிக்கப்பட்டது.

கிளையின் மின் பொறியியல் உதவியாளரும், ஊழியர்களும் முகாமை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது இடையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டனர்.

திருத்த வேலைக்கு முகாமுக்கு சென்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டு இவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சீருடையினர் சூட்டு இருவர் காயம்!

நல்லூர்,மார்ச் 9

நேற்றுக் காலை ஐந்தரை மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து முன்னூறுக்கும் மேற்பட்ட சீருடையினர் கவச வாகனங்கள் சகிதம் வளலாய் வீதியூடாகத் தொண்டமானாறு நோக்கிச் சென்றனர்.

பின்னர் 8.30 மணியளவில் அதே வீதியால் திரும்பி வந்த சீருடையினர் வயல் வெளிகள், வண்டில் பாதைகள் ஊடாக முகாமிற்குத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாராஷ்டிர முதல்வர் ராஜினமா!

பம்பாய் மார்ச், 8 மகாராஷ்டிரமாநில முதலமைச்சர் சிவாஜி ராவ் பட்டீல் தமது முதலமைச்சர் பதவியை இராஜினமாச் செய்தார்.

## மகளின் உயர் பதவிக்கு அதிகார துஷ்பிரயோகம்

பம்பாய் உயர்நீதி மன்றம் ஒன்று நேற்று முன்தினம் அளித்த தீர்பபை அடுத்தே இவரது இராஜினமா இடம்பெற்றது-

தமது மகள் பம்பாய் மருத்துவக் கல்லூரியில் உயர்பட்டம் பெறுவதற்காக சிவாஜிராவ் பட்டீல் முதலமைச்சர் பதவியைத் துஷ்பிரயோகம் செய்தார் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதற்காக பரீட்சைத் தாள் மதிப்பெண் மாற்றப்பட்டது என்பதையும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது

10 மாதங்களுக்கு முன்னரேயே சிவாஜிராவ் பட்டீல் முதலமைச்சராகப் பதவி ஏற்றிருந்தார்.

இவரது ராஜினமாவை அடுத்து புதியமுதலமைச்சர் ஒருவரை இந்திரா காங்கிரஸ் கட்சி தெரிவு செய்யும்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவானின் பெயரும் முதலமைச்சர் பதவிக்கு அடிபடுகிறது.

## சோவியத் அதிபர் அமெரிக்கா வராவிடில் றேகன் ரஷ்யா செல்லார்

வாஷிங்டன், மார்ச் 8 சோவியத் அதிபர் கொப்பர்ச்சேவ் இவ்வாண்டு உச்சி மாநாடு நடத்த அமெரிக்கா வராவிட்டால், அடுத்த ஆண்டு உத்தேச ரஷ்யப் பயணத்தை ஜனதிபதி றேகன் கைவிடுவார்.

ஜனதிபதி றேகன் பத்திரிகையாளர்களுக்கு அறிவித்த மேற்கண்ட தகவலை, வெள்ளை மாளிகை பேச்சாளர் லறி ஸ்பீக்ஸ் பின்னர் ஊர்ஜிதம் செய்தார்

சோவியத் அதிபரும், அமெரிக்க ஜனதிபதியும் சென்ற நவம்பர் மாதத்தில் ஜெனிவாவில் உச்சி மாநாடு ஒன்றை நடத்தினர்கள்.

இரண்டாவது உச்சி மாநாட்டை இவ்வாண்டு அமெரிக்காவிலும் மூன்ருவது உச்சி மாநாட்டை அடுத்த ஆண்டு ரஷ்யாவிலும் நடத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது

இரண்டாவது உச்சி மாநாட்டை செப்டெம்பரில் நடத்தும்படி ரஷ்யா தெரிவித்த கருத்தை அமெரிக்கா ஏற்பதாக இல்லை

நவம்பர் மாதத்தில் அமெரிக்க செனட் தேர்தல் நடைபெற இருப்பதால் இம்மாநாட்டை ஜூன் மாதம் நடத்தும்படி அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ரஜினீஸ் யோகியை கிறீஸ் நாடுகடத்தியது

ஏதன்ஸ், மார்ச் .8 இந்தியாவைச் சார்ந்த ரஜினீஸ் யோகி கிறீஸ் தேசத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டார்.

ஸ்பெயினை நோக்கி அவர் தனிப்பட்ட ஜெட் விமானத்தில் சென்று கொண்டிருக்கிறர்.

குடியகல்வு, குடிவரவு சட்டங்களை மீறிய குற்றத்துக்காக அவர் சென்றுண்டு அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்டார்.

நாடுகடத்தல் உத்தரவு வழங்கப்பட்டதும், ரஜினீஸ் யோகி, கிரேக்க அரசைப் பாசிஸ அரசென்று வர்ணித்தார்.

தனது ஒரு மாதகால விசா முடிவடையப் பத்து நாட்கள் இருக்கும் போது இந்த உத்தரவு வழங்கப்பட்டு இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

## நைஜீரியாவில் 10பேருக்கு தூக்கு

லாகோஸ், மார்ச் 8 நைஜீரிய இராணுவ அரசு பத்து இராணுவ அதிகாரிகளை சென்ற கிழமை தூக்கிலிட்டது

புரட்சிச் சதியில் ஈடுபட்டு இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

பிரபல கவிஞரும் முன்னள் அமைச்சருமான மேஜர். ஜெனரல் மாமன் வட்சாவும் இவர்களுள் ஒருவர்

சென்ற புதன் மாலை 5 மணிக்கு இவர்கள் தூக்கிலிடப்பட்ட போதும் இரண்டு மணித்தியாலம் சழித்தே இத்தகவல் வெளியிடப்பட்டது.

## அவசரகாலநிலை நீக்கம்

ஜோஹன்னஸ்பேர்க் மார்ச் 8 தென்னுபிரிக்காவில் அவசரகாலநிலை நேற்று நீக்கப்பட்டது.

## காவலுக்கு "வள்ளியம்மை"

தஞ்சாவூர், மார்ச் 8 தஞ்சாவூர்பிரகதீஸ்வர ஆலயத்தில் காவல் வேலைக்கு 'வள்ளியம்மை' என்று அழைக்கப்படும் யானை அமர்த்தப்பட்டு உள்ளது.

இக்கோயிலின் இராச கோபுரங்கள் இரண்டுக்கும் இடையே உள்ள பகுதியில் அண்மையில் நிகழ்ந்த களவைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

## நாக்பூரில் பொலிஸ் காவல்

நாக்பூர், மார்ச், 8 நாக்பூருக்கு அருகாமையில் உள்ள பூதானஇயக்கத்தந்தை வினேபா அடிகளின் ஆச்சிரமம் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு பலத்த பொலீஸ் காவல் போடப்பட்டுள்ளது.

ஆச்சிரமத்தின் பொறுப்பில் இருந்த அரை ஏக்கர் காணி தொடர்பான சச்சரவு காரணமாகவே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

---

### பின்னுறுதித் தீர்வை (கொப்பி)

### மாவட்ட நீதிமன்றம்

### முல்லைத்தீவு.

கந்தையா நாகராசா
பெண் பாக்கியதேவி
C/o, கந்தப்பிள்ளை
திருநாவுக்கரசு
1-ம் வட்டாரம்,
அம்பாள்வீதி,
வற்றப்பளை,
முள்ளியவளை.

வழக்காளி

வழக்கு இல:- 542/D

எதிர்

கந்தையா நாகராசா
மீசாலை வடக்கு
மீசாலை.

எதிராளி

இவ்வழக்கு 1985-ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ந் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியும் குடும்ப நீதிமன்ற நீதிபதியுமாகிய திரு. A.N. இராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு சட்டத்தரணி திரு. S.R. செல்வமார்க்கண்டு வழக்காளி சார்பில் தோன்றியும் வழக்காளி சமுகமாயிருந்தும் எதிராளிக்குக் கட்டளை அனுப்பப்பட்டும் கொடுக்க முடியாத காரணத்தால் பின்னர் தினசரிப் பத்திரிகையில் இவ்வழக்கைப் பற்றிய அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டும் எதிராளி வராமையாலும் ஒருமுக விளக்கத்துக்கு எடுக்கப்பட்டு பின் வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேற்குறித்த பாக்கியதேவிக்கும் கந்தையா நாகராசாவுக்குமிடையே உள்ள விவாக சம்பந்த உறவு விஷமத்தனமாக குறித்த கந்தையா நாகராசா பிரிந்திருந்தமை காரணமாக மணநீக்கம் செய்யப்பட்டு அப்பெண் தனது முன்னைய பெயரால் வழங்கப்படலாம் என்றும் ஒரு சுதந்திரமான பெண்ணுக்குரிய சகல உரித்தும் உடையவரென்றும் இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஒப்பம் :-
A. N. Ramachandran
மாவட்ட நீதிபதியும்
குடும்ப நீதிமன்ற
நீதிபதியும்.
1985-ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ந் திகதி

### புறக்குறிப்பு (Endorsement)

குடியியல் நடவடிக்கை முறைக்கோவைச் சட்டத்தின் 85 (1)-ம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட மேற்படி தீர்வையை குறித்த சட்டத்தின் 85 (4)-ம் பிரிவின் கீழ் ரத்துச் செய்ய விரும்பின் இது கிடைத்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் முறைமையாக விண்ணப்பிக்க வேண்டும்.

A. N. Ramachandran
மாவட்ட நீதிபதியும்
குடும்ப நீதிமன்ற
நீதிபதியும்.

திகதி:- 27-2-86.

வரைந்தவர்:
S. R. செல்வமார்க்கண்டு
வழக்காளியின்
சட்டத்தரணி.

---


### விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள், Antiques அலுமாரி'பெட்டகம், Ottoman, சாப்பாட்டுமேசைகள், Baby Cot, வெளிநாட்டு கிளாஸ் வகைகள், படுக்கைவிரிப்புகள், கட்டில்கள், அலுமாரிகள், Iorn மற்றும் பல பொருள்கள் உடன் விற்பனைக்குண்டு. 79. Main Street, laffna.

### மாணவ மணிகளே!

நுகரவனம் கூடிய மில்க்வைற் சலவைப் பவுடர் உங்கள் சீருடைகளை அதி வெண்மையாகச் சலவை செய்கிறது. 56 கிராம் மில்க்வைற் சலவைப்பவுடர் பைக்கற் ரூ. 2.00 மட்டுமே. 5 மேலுறைகளை அனுப்பி அழகிய திருக்குறள் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள். —மில்க்வைற் — யாழ்ப்பாணம்.

### வகுப்புகள்

தொலைக்காட்சி பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்: 1-4-1986 பயிற்சிக்காலம் 6 மாதம் கிழமை நாட்களில் இரு தினங்கள் விண்ணப்ப முடிவு திகதி 20-3-86. கட்டணம் மாதமொன்றிற்கு ரூபா 150 மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் திரு. எஸ் குணாளன், ரெலி கோணர் சாவகச்சேரி

### மணமகள் தேவை

நோர்வேயில் பொதுநிர்வாகத்துறையில் DE-GREE முடித்து MASTER DEGREE படித்துக் கொண்டு தொழில் புரியும் 31 வயது வேளாள குல ஹேமன் கத்தோலிக்க மணமகனுக்கு நோர்வேக்குப் போகக் கூடிய Bsc, Bcom படித்த அழகுள்ள மணமகள் தேவை. படத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 11, உதயன், 15 இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### வேலையாள் தேவை

கொக்குவில் வயோதிப மாதுவைப் பார்ப்பதற்கு வேலையாள் தேவை.ரூபா 200 வரை சம்பளமாகவும் உணவும் கொடுக்கப்படும் P. குமாரலிங்கம், பூனறிபரத்தடி, கொக்குவில்.


---

### 31 ம் நாள் நினைவஞ்சலி



மருதப்பு நடராசா
தோற்றம்:- 25-08-1909 மறைவு:- 08-02-1986
திதி:- 09-03-1986

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து கடமை, கண்ணியம், அன்புடன் எம்மை வாழவைத்த பாசம் நிறைந்த நேசத் தந்தையே! உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியையின் போது சமுகமளித்தோருக்கும் அநுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும் பல்வேறு உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

7ம், கட்டை, சங்கானை. - மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---


# மக்கள் வங்கி நகை அடைவு மீளப் பெறுதல்.

கீழ்க்கண்ட மக்கள் வங்கிக் கிளைகளில் அடைவு வைத்து, மீளப்பெறுவதற்கு ஏற்கனவே கிளைகளில் பணம் கட்டிய வாடிக்கையாளர்கள் பொருட்களை மீளப்பெறுவதற்கு குறிப்பிட்ட திகதிகளில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணி வரை குறிப்பிட்ட வங்கிக் காரியாலயத்தில் சமுகம் அளிக்கும்படி வேண்டிக்கொள்கிறோம். இது சம்பந்தமாக, அடைவு வைத்த கிளைகளில் தொடர்புகொள்ளவும்.

| அடைவு வைத்த கிளை: | மீளப்பெறும் கிளை: | சமுகமளிக்கவேண்டிய திகதி: |
|---|---|---|
| 1. மன்னார் - | யூனியன் பிளேஸ் கிளை கொழும்பு - 2. | 22-03-1986, 23-03-1986 |
| 2. வவுனியா - | டியூக் வீதிக் கிளை கொழும்பு - 1. | 22-03-1986. 23-03-1986 |
| 3. சாவகச்சேரி<br>4. சுன்னுகம்<br>5. நவீன சந்தை, யாழ்ப்பாணம் | மக்கள் வங்கி ஸ்டோர்ஸ் விஜயவர்த்தன மாவத்தை (மக்கலம் ரேட்), கொழும்பு . 2. | 22-03-1986 |
| 6. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்<br>7. பிரதான வீதி, யாழ்ப்பாணம்<br>8. கன்னுதிட்டி, யாழ்ப்பாணம் | மக்கள் வங்கி ஸ்ரோர்ஸ் விஜயவர்த்தன மாவத்தை (மக்கலம் ரேட்), கொழும்பு - 2. | 23-03-1986 |
| 9. ஊர்காவற்றுறை<br>10. காங்கேசன்துறை<br>11. கிளிநொச்சி<br>12. பரந்தன் | மக்கள் வங்கி ஸ்ரோர்ஸ் விஜயவர்த்தன மாவத்தை (மக்கலம் ரேட்), கொழும்பு - 2. | 24-03-1986 |
| 13. முல்லைத்தீவு<br>14. பருத்தித்துறை<br>15. வல்வெட்டித்துறை | மக்கள் வங்கி ஸ்ரோர்ஸ் விஜயவர்த்தன மாவத்தை (மக்கலம் ரேட்), கொழும்பு - 2. | 25-03-1986 |

எம். கணேசசுந்தரம்.
பிரதேச முகாமையாளர்.
மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

எதற்கும் அவசரப்படக்கூடாது. தூய்மை, பொறுமை, உழைப்பு - மூன்றும் வெற்றிக்கான படிகள். எல்லாவற்றுக்கும் மேலானது அன்புதான்.

- அன்னை சாரதாதேவி.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, பின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
09-03-86
தொலைபேசி: 24805 22073
த. பெ. 28

# மீண்டும் ஒருமுறை போர் நிறுத்தமா?

மீண்டும் ஒருமுறை தமிழ்ப் போராளிகளுடன் போர் நிறுத்தம் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறதாம். இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி இதனை அறிவித்திருக்கிறார்.

சென்ற தடவை போர்நிறுத்தம் அமுல் செய்யப்பட்டபோது தமிழ் மக்களை அரசாங்கப் படைகள் ஈவிரக்கம் இன்றித் தாக்கியும் கொன்றும் வந்தன. ஆனால் போராளிகள் தான் யுத்த நிறுத்தத்தை மீறுகிறார்கள் என்று அமைச்சர் அத்துலத் அடிக்கடி குற்றஞ் சாட்டிவந்தார்.

அதுமட்டுமன்றி யுத்தநிறுத்த காலத்தில் அரசாங்கம் தனது இராணுவ பலத்தை அதிகரித்தது. நவீன யுத்த விமானங்கள், பீரங்கிப் படகுகள், ஆயுதங்கள் என்று ஏராளமானவற்றை வாங்கிக்குவித்தது.

இவ்வாறு தனது இராணுவ பலத்தைப் பெருக்கிய பின்னர், (போராளிகள் இணங்காவிட்டாலும்) தான் ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தத்தை நீடிப்பதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

அப்போதும்கூட போராளிகளின் தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு அரசபடைகள் தமிழ் மக்களைக் கொன்றுவந்தன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சமர்ப்பித்த சில அறிக்கைகளில்கூட போர் நிறுத்தத்தை மீறிப் பொதுமக்கள் தாக்கப்பட்டார்கள் என்ற விவரம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது

தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறிய அரசாங்கம், மீண்டும் ஒரு போர்நிறுத்தத்தை விரும்புவது ஏன்? அதில் இவ்வளவு அக்கறை எதற்காக? அரசாங்கத்தின் உள்நோக்கம்தான் என்ன?

நீயா, நானா என்று இந்தியாவுடன் மல்லுக்கட்டிக் கொண்டு நிற்கிறது இந்த நாட்டு அரசு. சில உண்மைகளைச் சொல்லப் போனால் உள்ளம் கொதிக்கிறது அதற்கு. கோபமும் வருகிறது. இந்தியாவுக்குப் பாடம் புகட்டத் தயாராக இருப்பதாகக்கூட இலங்கை நாடாளுமன்றத்தில் கூறுகிறார்கள்.

இத்தகைய ஒரு பின்னணியில் மீண்டும் போர் நிறுத்தம் என்று அமைச்சர் அத்துலத், தொனியை கீழிறக்குவதில் நிச்சயம் ஒரு மர்மம் (அல்லது சதி என்றும் சொல்லலாம்) இருக்கும் எனக் கருதுவதில் தப்பு என்ன?

தமிழ்ப் போராளிகள் பாக்கு நீரிணையால் ஆயுதங்களையும் ஆட்களையும் கொண்டுவந்து குவிக்கிறார்களாம். அதனை நிறுத்த இந்தியாவால்தான் முடியுமாம்.

ஆட்கள், ஆயுதங்களைக் கொண்டு வருவதை நிறுத்த இணங்கினால், யுத்த நிறுத்தத்துக்குத் தாம் தயாராம்.

இதன் அர்த்தம் என்ன? தன்பலத்தை விட எதிரியின் பலம் அதிகரிக்காது பார்த்துக்கொள்ளும் தந்திரமோ?

சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது. ஓர் அனுபவம் இந்தியாவுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. அது மட்டுமன்றி இலங்கையின் உண்மையான குணஇயல்புகளை இந்தியா நன்றாகப் புரிந்து கொண்டு விட்டது.

அதனால் இனியும் ஒரு போர் நிறுத்த உடன்படிக்கையைச் செய்வதற்கு அது இணைக்கு நிற்குமா என்பது சந்தேகமே.

தனக்குத் தேவையான வேளையில் 'அப்புராசா' என செல்லங்கொஞ்சுவது, தனக்கு வேண்டாத நேரத்தில் 'நீ யார் எனக்கு' எனக் கேட்பது. இலங்கையின் 'அரிய' குணம் இது தான் என்பது இந்தியாவுக்கு நிச்சயம் புரிந்திருக்கும்.

போர் நிறுத்தம் செய்வதற்கு இலங்கைக்கு ஒருவழியுண்டு. யார் துணையையும் அது நாட வேண்டியதும் இல்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெற்று விட்டால் அதுவே போர் நிறுத்தமாகும். புண்ணுக்கு மருந்து தன்னிடமே இருக்கும்போது, பிறரிடம் போய் மருந்து வாங்கப் பணம் கேட்கலாமா?

## மகளிர் பேரணியை பொலீஸார் கலைத்தனர்

### கொழும்பில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 9

கடந்த வியாழன் மாலை கொழும்பு நகர மண்டபத்துக்கு முன்னால் நடந்த மகளிர் ஆர்ப்பாட்டப் பேரணியை பொலீஸார் கலைத்தனர்.

இதனை ஒழுங்கு செய்த இரண்டு பெண்கள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பேரணி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டது.

சமசமாஜ மகளிர் அணி, இலங்கை மகளிர் முன்னணி, ஜ. தொ. கா. மகளிர் பிரிவு ஆகியன இந்தப் பேரணியை ஒழுங்கு செய்து இருந்தன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும், வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட வேண்டும் ஆகிய கோஷங்களை எழுப்பியபடி சுமார் 200 பெண்கள் பேரணியில் பங்குபற்றினர்.

தவக்கால 4 ஆவது வாரம்

# தேவன் கிருபை உள்ளவர்

## எப்போதும் மன்னிக்க காத்திருக்கும் தந்தை அவரே

இறைமகன் இயேசு இப்பூமியில் பிறக்கும் முன்பே அமோஸ் எனும் தீர்க்கதரிசி நீதியைக் கடைப்பிடிக்கும்படி அக்காலமக்களுக்கு இறைவனின் திருப்பெயரால் கட்டளையிட்டார்.

"தீமையைத் தேடாதிருங்கள்; நீங்கள்பிழைத்திருக்கும்படி நன்மையைத் தேடுங்கள்;

தேடினால் நீங்கள் சொல்லுகின்றபடியே சேனைகளின் கடவுளாகிய கர்த்தர் உங்களோடிருப்பார். தீமையை வெறுத்து நன்மையை விரும்புங்கள்; ஊர் வாசலில் நியாயத்தை நிலைநாட்டுங்கள்; சேனைகளின் கடவுளாகிய கர்த்தர் யோசேப்பிலே மீதியானவர்களுக்கு இரங்கினாலும் இரங்குவார்:

நியாயம், தண்ணீரைப் போலவும் நீதி, வற்றாத நீரோடையைப் போலவும் புரண்டு ஓடுவதாக;

கருப் பொருள்:- உளமாற்றுப்பணி.

வாசகம்:

யோசுவா 5:9:12

2கொரிந்தியர்:5:17–21.

லூக்காஸ்:15:1-3 11-32,

இவ்வாரம் எமக்கு இறைவன் 'ஊதாரிப்பிள்ளையின் உவமையின் மூலம் உளமாற்றுப் பணியை எடுத்துக் கூறுகின்றார்.

உளமாற்றுப் பணியை நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ள எமது வாழ்வில் அன்பு, மன்னிப்பு, நீதி என்பன நிறைந்திருக்கவேண்டும்.

அன்பு, மன்னிப்பு, நீதி இவைகள் நிறைந்த வாழ்வின் இரகசியம்தான் என்ன?

ஆரம்பகால கிறிஸ்தவ தலைவர்களில் ஒருவரான பவுல் (புனித சின்னப்பர்) இறைவனோடு ஒப்புரவாகி அவர் மகன் இயேசுவோடு ஒன்றிணைந்திருக்கும் புதுவாழ்வே அன்பு, மன்னிப்பு, நீதி நிறைந்த வாழ்வின் இரகசியமாகும் என்கின்றார்.

ஒருவன் இயேசுவோடு இணைக்கப்படும்போது ஒரு புதிய உலகம்தோன்றுகின்றது. பழைய உலகம் கடந்துபோயிற்று: இதோ! புதியதொன்று தோன்றியுள்ளது

இவையாவும் கடவுளின் செயலே: அவரே கிறிஸ்துவைக் கொண்டு நமக்குத் தம்மோடு நல்லுறவை உண்டாக்கியிருக்கிறார். மற்றவர்களும் அவர் அருளும் நல்லுறவை ஏற்குமாறு உழைக்கும் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்.

அதாவது கடவுள் உலகத்தாரின் தவறுகளை



எண்ணிப் பாராமல் அவர் தாமே கிறிஸ்துவுக்குள் இருந்து அவர்களுக்குத் தம்மோடு நல்லுறவை உண்டாக்கி அவ்வாறு நல்லுறவை உண்டாக்கினசெய்தியை எங்களிடம் ஒப்புவித்திருக்கிறார்

ஆகையால் நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாயிருக்கிறோம், கடவுள் தாமே எங்களைக் கொண்டு உங்களைக் கேட்டுக் கொள்வது போல, நாங்கள் கிறிஸ்துவின் திருப்பெயரால் உங்களை வருந்திக் கேட்டுக் கொள்கிறோம்.

நீங்கள் கடவுளோடு நல்லுறவு கொள்ளுங்கள். கிறிஸ்துவோடு இணைக்கப்படுவதன் மூலம் நாம் கடவுளது நீதியின் உருவாகும்படி; பாவமே அறியாத அவரைக் கடவுள் நமக்காகப் பாவத்தில் உருவாக்கினார். எனவே மனித அவதாரம் எமக்காகினார்.

தேவன் கிருபையுள்ளவராக என்றும் இருக்கின்றார். எப்பொழுதும் மன்னிக்கக் காத்திருக்கும் தந்தை அவரே.

செல்வி அன்ரலின் மைதிலி செல்வராசா

### கோணாவில் அக்கராயனில் தேடுதல்

கிளிநொச்சி, மார்ச் 9

புதன் அதிகாலை கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து கவசவாகனங்களிலும் இ போ. ச. பஸ்களிலும் சென்ற இராணுவம் கோணாவில், அக்கராயன் பகுதிக்குச் சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக அறியப்படுகிறது.

ஹெலிக்கொப்டர்கள் அதிகாலையிலேயே வானத்தில்பறந்தன. வீதியில் பலத்த துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டன,

## ஆமி வந்திருக்கிறோம் கொட்டியா இருக்கிறதா?

### இப்படி சிங்களத்தில் கேட்டு கரடிப்போக்கில் கொள்ளை

கிளிநொச்சி, மார்ச் 9

'ஆமி வந்திருக்கிறோம், கொட்டியா இருக்கிறதா? வீட்டைத்திறவுங்கள் என சிங்களத்தில் பேசியவர்கள் சுமார் மூன்றரைலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

கிளிநொச்சி கரடிப்போக்கு (பார்) மது விற்பனை நிலைய உரிமையாளர் இ குணரத்தினம் என்பவரது வீட்டில் 3ம் திகதி இரவு இச்சம்பவம் நடந்தது.

மெஷின்கன், கிரனேட் உட்பட பல ஆயுதங்கள் சகிதம் வந்த ஆறுபேர் சிங்களத்தில் கதவைத் திறக்குமாறு கூறினர். கதவு திறக்காதிருக்க அலவாங்கு போன்ற ஆயுதத்தால் கதவை உடைக்க முயன்றனர். அப்போது வீட்டார் கதவைத்திறந்து விட்டனர்.

ஆமி உடையிலும் சிவில் உடையிலும் இரவு சுமார் 10 மணியளவில் வீட்டுக்குள் நுழைந்தவர்கள் சகலரையும் ஓரிடத்தில் இருத்திவிட்டு சுமார் ஒருலட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா பணத்தையும், சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் அபகரித்துச் சென்றனர்.

அத்துடன் வீட்டு உரிமையாளரான இ. குணரத்தினம் என்பவரை அடித்து துன்புறுத்தினர்.

வீட்டில் இருந்த சகலரும் பயமுறுத்தப்பட்டனர். வீட்டில் இருந்தவர்களது கண்ணுக்கு டோர்ச்லைட் அடித்தபடி ஒருவர் நின்றார் என்றும் சொல்லப்படுகிறது.

### திருமலைக்கு புதிய அரச அதிபர்

திருகோணமலை, மார்ச் 9

திருகோணமலை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக திரு. ஏ. ஆரியரத்தின நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்னும் சில தினங்களில் திரு. ஆரியரத்தின பதவி ஏற்பார் என்று தெரிகிறது.

திரு. ஆரியரத்தின இதற்கு முன்பு, அம்பாறை மாவட்ட அரச அதிபராகப் பணியாற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமலை அரசாங்க அதிபராகப் பணியாற்றி வந்த திரு. கமிலஸ் பெர்னாண்டோ, விவசாயத் திணைக்கள இயக்குநராக பதவியுயர்வு செய்யப்பட்டுள்ளார்.

## களுவாஞ்சிக்குடி: சிங்கள இளைஞர் உட்பட 16 பேர் விடுதலை

மட்டக்களப்பு, மார்ச் 9

களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் சிங்களஇளைஞர் ஒருவர் உட்பட 16 பேர்விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் 15 பேர் பெரியகல்லாறு வாசிகளாவர்.

விடுதலையானோர் பெயர் விவரம் வருமாறு:-

சி கனகசபை, வீ. நடராசா, ப. மகேந்திரராஜா, வி. முருகேசு, செ. தங்கவடிவேல், இ. முத்துலிங்கம், சி. மகேந்திரன், வி. குலசுந்தரராஜா, வி, விஜயதுங்க, க. பிரேம்குமார், சு. நவரட்ணராஜா, ஐ. இராசலிங்கம், பூ சிவகரன், வே. கோகிலை [illegible] செட்டிபாளையத்தைச் சேர்ந்த [illegible] என்பவரும் அன்றைய தினம் அதே முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு முகாமிலிருந்து முதலியார் தெரு வாசி அ பிரேம்குமார், இருதயபுரம் வாசி ம. தங்கவடிவேல், மாமாங்க கொலனிவாசி பெனடிக்ட் விஜயராஜா ஆகியோரும் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இணைப்பு அதிகாரி திரு. மக்ஸி பெரேரா பிரஜைகள் குழுவிற்கு அறிவித்துள்ளார்.

### பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை கோப்பாயில்

யாழ்ப்பாணம், மார்ச் 9

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்க்கு இடம் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது.

கோப்பாய் [illegible] யாலயத்தின் ஒரு பகுதியில் [illegible] ஆசிரிய பயிற்சிக் கலாசாலை தற்பொழுது இயங்கி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*பொய்யாமொழி*

குறள்:

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

பொருள்:

வணக்கம் உடையவனாகவும் இன்சொல் வழங்குவோனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலனாகும்; மற்றைய அணிகள் அணிகள் அல்ல.

## 77இல் தமிழர் தாக்கப்பட காரணமானவர்கள் யார்?

### அரச, எதிர்த்தரப்பு எம். பிக்கள் மோதல்

கொழும்பு, மார்ச் 7

1977 இல் தமிழர் தாக்கப்பட்டு, கொல்லப்பட்டதற்கு யார் காரணம்?

இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் அரசு எம்.பியும் எதிர்க்கட்சி எம்.பியும் மோதிக்கொண்டனர்.

தம்பதெனியா எம்.பியும் யாழ்ப்பாணம் மாவட்ட அமைச்சருமான திரு யு. பி விஜயகோன் சொன்னதாவது;

இன்று நாட்டில் உள்ள பிரச்சினைக்கு மூலகாரணம் 1956இல் சுதந்திரக் கட்சி அரசாங்கம் கொண்டு வந்த தனிச் சிங்களச் சட்டம் தான். இந்த நிலையை உருவாக்கியவர்கள் இன்று எமது அரசாங்கத்தைச் சாடுவது விவேகமற்றது

1977இல் ஏற்பட்ட கலவரத்துக்குக் காரணமானவர்களே சுதந்திரக் கட்சியினர். அவர்கள் தான் தமிழர்களின் வீடுகளை எரித்தார்கள்; கொள்ளை அடித்தார்கள்; கொலை செய்தார்கள்.

இக்கட்டத்தில் குறுக்கிட்டுப் பேசிய கொழும்பு மத்தி 3ஆவது எம்.பி ஜனாப் ஹலிம் இஷாக் (சுதந்திரக் கட்சி) சொன்னதாவது:

1977 கலவரத்துக்கு தூபமிட்டு நடத்தியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரே. இதை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரே ஏற்றுக்கொண்டு விட்டார்.

### பூஸாவிலிருந்து விடுவிப்பு

திருகோணமலை, மார்ச் 9

பூஸாதடுப்பு முகாமில் இருந்து 34 தமிழர்கள் கடந்த புதன்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

ரயில் மூலம் இவர்கள் திருமலை வந்து சேர்ந்தனர்.

## வடக்கு, கிழக்கு காற்று மலையகத்திலும் வீசும்

### சந்திக்குச் சந்தி பொலீஸ் நிலையம் திறக்கக் கோருகிறார் காமினி

கொழும்பு, மார்ச் 9

வடக்கு ,கிழக்குப் பகுதிகளில் தற்சமயம் வீசும் 'காற்று' மலையகத்திலும் வீசப்போகின்றது. இதைத் தடுத்து நிறுத்த மலையகப் பகுதிகளில் சந்திக்குச் சந்தி பொலீஸ் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும்.

இப்படி காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா சொன்னார்.

மலையக வன்செயல் பற்றிய நாடாளுமன்ற விவாதத்தில் அமைச்சர் திஸநாயக்கா பேசினார். அவர் மேலும் சொன்னதாவது;

மலையகத்தில் மக்கள் தங்கள் பாதுகாப்புக்காக வாள் வைத்து இருக்கிறார்கள்.

தனிப்பட்ட பாதுகாப்புக்காக வாள் வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

இன்று வாள் வைத்து இருப்பவர்கள் நாளை துப்பாக்கியும் வைத்து இருப்பார்கள்.

தனது சமூகத்தின் பாதுகாப்பைக் கவனிப்பது தனது கடமை என்று திரு. தொண்டமான் கூறுகிறார்.

அப்படியானால் எங்களுடைய மக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்குள்ளது.

பிலிப்பீன்ஸில் சுதந்திர ராணுவம் இயங்குவது போன்ற நிலைமையை இங்கு நாம் அனுமதிக்க முடியாது.

'வாள் வைத்து இருக்கும் பிரச்சினையை ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா சொன்னார்.

## இளைஞர் மின்கம்பத்தில் கட்டப்பட்டார்

### மண்டைதீவில் சம்பவம்

மண்டைதீவு, மார்ச் 9

கொலை,களவு, வழிப்பறி ஆகிய சம்பவங்களில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் மண்டைதீவில் சில மணித்தியாலம் மின்கம்பத்தில் கட்டப்பட்டார்.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களில் இந்த இளைஞர் கோஷ்டியாக சென்று மேற்படி சம்பவங்களில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்தாராம்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த இளைஞர் ரவி. இந்த நபரை இளைஞர் குழுஒன்றுபிடித்துஆரம்ப தண்டனையாக இதை வழங்கியது.

இவரது வாக்கு மூலங்களின்படி இவருடன் பலர் இச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. ஏனையோரைத்தேடி இளைஞர் குழு தீவுப்பகுதி எங்கும் வலைவிரித்துள்ளது

### 3 இளைஞர்கள் பலி!

மட்டக்களப்பு, மார்ச்.9

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மூன்று தமிழ் இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பலியானார்கள்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பகுதியில் இடம்பெற்றது.

அப்பகுதியில் ஆயுதப் படையினர் மறைந்து இருந்து தேடுதல் நடத்தியபோது இச்சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவர்களின் சடலங்களை ஆயுதப்படையினர் எடுத்துச்சென்றனர்.

### திருமலையில் ஐ. ஜி. பி.

திருகோணமலை, மார்ச் 9

பொலீஸ் மாஅதிபர் சிரில் ஹேரத் வியாழன் திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி உள்ளூர் பொலீஸ் அதிகாரிகளுடன் பொலீஸ் மாஅதிபர் பேச்சுக்கள் நடத்தினார்.

குச்சவெளி, மூதூர், முதலிக்குளம், கந்தளாய் பொலீஸ் நிலையங்களுக்கும் பொலீஸ் மாஅதிபர் விஜயம் செய்தார்.

### புதிய முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு, மார்ச் 9

புதிதாக முஸ்லிம் காங்கிரஸ் ஒன்று கொழும்பில் உதயமாகப் போகிறது.

இது சம்பந்தமாகப் பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் கொழும்பில் மார்ச் 16 இல் நடைபெற உள்ளது.

சுதந்திரக் கட்சிப் பிரமுகர் ஜனாப். அலவி மௌலானா இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

### சுவர்க்கம் இதோ போனார்!

சகோ. பிர. ப்ாலகிருச்ணன்

சத்தமே செய்யாத—ஒரு
தத்துவ விளைவே இவன்!
புத்தம் புதுமலரின்—சுக
சுத்தம் இவன் சித்தம்!
'முத்து' விளைவாகும்—மௌன(ச்)
'சிப்பி'! மொத்தத்தில்
இத்தரை கண்ட சுவைச்
சித்திரம் இவன் வாழ்க்கை!

விடெனும் குடம் விழுங்கும்
விளக்கல்ல!—இம் மகேசன்,
நாடெனும் நலம் நினைத்த
முழுநிலா! ஒருவன் வாழ்வில்
தேடியே அடையத் தக்க
நட்பிவன்! இவனோடிங்கே
கூடிநான் வாழ்ந்த நாட்கள்
திருவிழா நாட்கள் ஆகும்!

விருந்தானேன்! தேவை வேண்டின்
விருப்புடன் வெறுப்பும் மீறி
மருந்துமாய் ஆனேன்! இவனோர்
மகத்துவம்! கீதை சொன்ன
'கர்மமே தர்மம்' என்ற
கருத்துக்கு இவனே அர்த்தம்!
இரும்புபோல் உறுதி! உள்ளே
இதயம்செங் கரும்புச் சாறு!

'தெய்வம் உலாவந்த— கோயிற்
திருத்தேர் இவன்' என்றால்
பொய்யுரை ஆகாது! —இவனைப்
புரிந்தவன் நான் சாட்சி!
'செய்கை நலம்' காத்தான்—வாழ்வில்
சிகரநிலை யாத்தான்!
கொய்த மலர் ஆனான்!—ஈற்றில்
சுவர்க்கம் இதோ போனார்!

மானிப்பாய் முதலியார் வை. மகேசனின் ஈமக்கிரியைகள் இன்று நடைபெறுகின்றன அதை யொட்டி இக்கவிதை பிரசுரமாகிறது

**Telivision Engineering Course**
(6 Months - weekends)
**Theory and Practicals**
விரிவுரையாளர் Mr. E. கணபதிப்பிள்ளை
ஆரம்பம் 9-3-1986.
கட்டணம்: மாதம் ரூபா. 250
Cantabia Institute
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

# உதயன்

09. 03. 1986

**TOEFL**
New Batch Commences
on 15-3-86
Fees - only Rs. 250 only for the full course
Lecturer Mr. Kandiah Navarendran
Cantabia Institute
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

★ 700 மலையகத் தமிழர் மன்னருக்கு இடம் பெயர்வு

# பறையனாலங்குளத்தில்

# நேற்றும் இருவர் சுட்டுக் கொலை

## இதுவரை அறுவர் ஏழுபேரை காணவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 9

வவுனியா, பறையனாலங்குளத்தில் மேலும் இரண்டு மலையகத் தமிழர் நேற்று துப்பாக்கிக் குண்டு தாக்கி மரணமானார்கள். இவர்களில் ஒருவர் ஆண். மற்றவர் பெண்.

ஆயுதப் படையினர் நடத்திய தேடுதலின் போது இச் சம்பவம்

**மரணம்**

நடந்தது.

இதுவரை ஆறு பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஏழு பேரைக் காணவில்லை.

பறையனாலங்குளத்தில் ஆயுதப்படையினர் முகாம் ஒன்றை நிறுவி வருகின்றனர்.

அப்பகுதி மக்களைக் கொண்டு முகாமிற்குரிய பிரதேசங்களைப் படையினர் துப்புரவு செய்கின்றனர்.

இதனால் அப் பகுதியில் பயங்கர நிலைமை ஏற்பட்டு உள்ளது.

இரவிரவாக மக்கள் பெருந் தொல்லைகளுக்குள்ளாக்கப்படுகிறார்கள். பெண்கள் மானபங்கப் படுத்தப்படுகிறார்கள்.

சிலரைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது. கறுப்புச் சிருடையினரின் அட்டகாசம் அப்பகுதியில் அதிகரித்து உள்ளது.

இதன் காரணமாக 171 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 700 மலையகத் தமிழர் மன்னார் நோக்கி அகதிகளாகச் சென்றுவிட்டார்கள் என்று செய்திகள் வந்துள்ளன.

## கோட்டைஅருகில் 15-16இல் ஓய்வூதியம்

### இருட்டிய நேரத்தில் நிற்க வேண்டாம் என ஆலோசனை

சுண்டுக்குளி, மார்ச் 9

இலங்கை வங்கி கச்சேரி கிளையில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்குரிய மார்ச் மாதத்துக்கான ஓய்வூதியம் எதிர்வரும் 15ஆம் திகதி 16ஆம் திகதிகளில் கோட்டை கொடுப்பனவு காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

சிவில்ஓய்வூதியம் பெறுவோர் சகலருக்குமான கொடுப்பனவுகள் 15ஆம் திகதி சனிக்கிழமை வழங்கப்படும்.

16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விதவைகள்–அனாதைகள் – ஆசிரியர்–ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள்—படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகியோருக்கான ஓய்வூதியம் வழங்கப்படும்.

இந்தக் கொடுப்பனவுகள்யாவும் காலை மணி 9·00மணியில் இருந்துபிற்பகல் 1 00 மணி வரை வழங்கப்படும்.

ஓய்வூதியம் பெறுவோர் இந்தக் கொடுப்பனவு நாட்களில் கோட்டை கொடுப்பனவு காரியாலயத்தின் பக்கம் இருட்டான வேளைகளில் நிற்பதையோ நடமாடுவதையோ தவிர்த்துக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### பர்மிய மீனவர் கொழும்பில்

கொழும்பு, மார்ச் 9

திசை மாறி வடபகுதியில் தாளையடியில் வந்து இறங்கிய 4 பர்மிய மீனவர்களும் கடந்த வியாழக்கிழமை கொழும்பு குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தாளையடி உதவி அரசாங்க அதிபர், இப் பர்மிய மீனவர்களை மார்ச் 3ஆம் திகதி யாழ். அரச அதிபரிடம் ஒப்படைத்திருந்தார்.

### திஸ்ஸ வீரதுங்க 5 நட்சத்திர ஜெனரல்

கொழும்பு,மார்ச் 9

லெப்டினன்ட் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க 5 நட்சத்திர ஜெனரலாக ஜனாதிபதியினால் பதவி உயர்த்தப்பட்டார்.

இப்பதவி உயர்வு வழங்கப்பட்ட இரண்டாவது இலங்கை இராணுவ அதிகாரி இவர் ஆவார்.

5 நட்சத்திர ஜெனரல் என்ற உயர் பதவியைப் பெற்ற முதலாவது இலங்கையர் ஜெனரல் சேபால ஆட்டிகல என்பது குறிப்பிடத்தக்கது.

### சேவை நலம் பாராட்டு விழா

சுன்னாகம், மார்ச் 9

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு சுன்னாகம் அரசினர் வைத்தியசாலை டாக்டர் மயில்வாகனம் சந்திரசேகரத்தின் சேவை நலம் பாராட்டு விழா நடைபெறுகிறது.

சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் இவ்விழா மான் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

## அரச படைகள் பலம் பெற்று விட்டன என்கிறார் அத்துலத்

லண்டன், மார்ச்.8

போராளிகளுடன் மோதி வெற்றி காணும் நிலையில் அரச படைகள் பலம் பெற்றுள்ளன. குடிமக்கள் பாதிக்கப்பட்டு விடுவார்கள் என்ற பயத்தினால் அரசபடைகள் மோதாமல் உள்ளன.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பி.பி.சி. இலங்கைச் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

பி. பி. சி. இலங்கைச் செய்தியாளர் ஹம்ப்ரி ஹோக்ஸ்லி அமைச்சரைப் பேட்டி கண்டார்.

அமைச்சர் அத்துலத் முதலி மேலும் சொன்னதாவது;

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளியேறிய சிங்களவர்கள் அடுத்த ஆறு வாரங்களுக்குஇடையில் பழைய இடங்களில் குடியமர்த்தப்படுவர்.

அப்படி அவர்கள் குடியமர்த்தப்பட்டவுடன் சிங்கள மக்களின் நலன்கள் பறிபோகிறது என்று குரல் எழுப்பும் சிங்கள தேசியவாதிகளின் மூச்சு அடங்கிவிடும்.

இலங்கை அரசாங்கமும் பலம் பொருந்திய நிலையில் அச்சமயம் விளங்கும்

அந்த நிலையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது இலங்கை அரசுக்குச் சுலபமாகும்.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்

### தூதுவர் டிச்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திய வெளியுறவு அமைச்சுக்கு அழைக்கப்பட்டு அவரிடம் இந்தியாவின் கவலையும், அதிர்ச்சியும் தெரிவிக்கப்பட்டது

அதனைத் தமது அரசாங்கத்திடம் தெரிவிக்கவே திரு. திலகரத்தின இங்கு வந்துள்ளார்.

திரு. டிக்ஸிற் நேற்றிரவு கொழும்பு வந்து சேர்ந்தார்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் இப்போதைய நிலை குறித்து திரு. டிக்ஸிற் மிக விரைவில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்து எடுத்துரைப்பார்.

பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் விசேட குறிப்பு ஒன்றையும் திரு. டிக்ஸிற் கொண்டு வந்திருப்பதாகவும் கொழும்பில் நேற்றிரவு பலமாகப் பேச்சடிபட்டது.

## பெண்கள் தனித்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் உடனுக்குடன் சிகிச்சையளிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்ட பெண்கள் கொண்டுசென்ற சுலோக அட்டைகள் வருமாறு:-

நாங்கள் கூவாமல் பொழுது விடியாது.

எம்மைத் துகிலுரியும் எழுத்தாளர்கள் பெண் இனத்தின் துரோகிகள்.

குங்குமம் தாங்கிடும் நெற்றியில் இனிமேல் பொங்கிடும் புரட்சி.

ஈழப் போரே எமக்கு வேண்டும், இயக்கப் போர் வேண்டாம்.

விமானத் தாக்குதல் பணிய வைக்காது, வியட்னாம் மண்ணிலும் விடுதலை பூத்தது.

அடுப்போடு வாழ்ந்த நெருப்புகள் நாங்கள் எரிப்பதற்காக எழுந்து வருகிறோம்.

இனவெறி அரசே ஏழை விவசாயப் பெண்களை கூலிப் படைக்குத் தீனியாக்காதே.

அரைகுறை வைத்தியம் நிரந்தர தீர்வல்ல ஆறுவைச் சிகிச்சையே மாற்று மருந்து.

ஸ்ரீலங்கா அரசே மலையகப் போராட்டத்தை மழுங்கடிக்காதே.

உலகப் பெண்களே ஒன்று சேருங்கள்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை ஈழப் பெண்களுக்குரிய வாரமாக ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி பிரகடனம் செய்துள்ளது.

இந்த நாட்களில் ஈழப் பெண்களின் அடக்கு முறைகளை உடைத்தெறிய ஆர்ப்பாட்டப் பேரணிகளையும், பொதுக் கூட்டங்களையும் நடத்துமாறு மேற்படி முன்னணி தெரிவித்துள்ளது.

### கடத்தப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் அகற்றப் பட்டிருந்தனவாம்.

20 பரல் டீசல்,20பரல் மண்ணெண்ணை, 50டியூப் ஒயில், ஆட்டுக்கல், டெலிவிஷன் ஒன்று ஜவுளி முதலியன தான் கொள்ளை இடப்பட்டவைவாம்.

### போராளிகள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லப்படுகிறது.

தொண்டமானாறுமுகாமில் இருந்து பாலம் ஊடாக வெளியே வந்த சிப்பாய்கள்மீது இத்தாக்குதலை போராளிகள் மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளே இந்த இரண்டு தாக்குதல்களையும் நடத்தினர் என்று சென்னையில் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிருடையினர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிக் கொண்டிருந்தவர்.

அப்போது பாம் பீச் என்றஇடத்திற்கு அருகே சிருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

இதனால் அப்பகுதியில் ஒரு வீட்டு முற்றத்தில் நின்ற இருவர் காயமடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:

விரவாகு நல்லம்மா(52 வயது) பலாலி.

இவருக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டு அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இராமநாதன் கமலா (30 வயது).

இவருக்குக் காலில் காயமேற்பட்டது.

### இராணு---

(1ம் பக்க தொடர்ச்சி)

களைப் பார்த்து ''பயப்படாதீர்கள். உங்களுக்கு ஒன்றும் செய்ய வரவில்லை. சுவாமியை நன்றாகக் கும்பிடுங்கள்''—என்று கூறினார்களாம்.

உங்களைப் போல் நாமும் சுவாமியைத் தரிசிக்கவே வந்துள்ளோம் என்றும் சிப்பாய்கள் கூறினார்களாம்.

சிப்பாய்களுடன் வந்த பெரிய அதிகாரி, பூஜைக்குத் தட்சணை கொடுத்து பெயர்களைக் கூறி அர்ச்சனையும் செய்வித்து பிரசாதமும் பெற்றுக்கொண்டார்.

பயந்து போன பக்தர்கள் பிரமித்தனர்.

வலைப்பந்து

## இன்று இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் இன்று யாழ் பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடைபெறுகின்றன.

காலை 9. 00 மணிக்கு அரையிறுதியாட்டங்கள் நடைபெறும்,

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து பல்கலைக் கழக 'பி' அணி மோதும்.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பல்கலைக்கழக 'ஏ' அணி, பமிலியன்ஸ் அணியுடன் மோதும்.

அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெறும் இரண்டு அணிகளும் இன்று மாலை மூன்று மணிக்கு ஆரம்பமாகும் இறுதியாட்டத்தில் பங்கு பற்றும்.

இறுதியாட்டத்திற்கு பிரதம விருந்தினராக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரட்ணம் கலந்து கொள்வார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட்

## இந்தியா பங்குபற்றாதது பாகிஸ்தானுக்கு வருத்தம்

கொழும்பு, மார்ச் 9

ஆசிய கிண்ணத்துக்கான கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் இந்தியா கலந்து கொள்ளாதது பலத்த ஏமாற்றத்தைத் தருகிறது.

இப்படி பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் இம்ரான்கான் கவலை தெரிவித்தார்.

மார்ச் 30 இல் இருந்து [illegible] கிண்ணக் கிரிக்கெட் போட்டி [illegible] நடைபெற உள்ளது.

இந்தியா இப்போட்டியில் பங்குபற்ற மாட்டாது என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைக் கிரிக்கெட் சங்க வட்டாரங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளன.

இதனிடையில் இலங்கைக் கிரிக்கெட் கழகச் செயலாளர் ஜனாப் நுஸ்கி முகமது கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தியா கலந்து கொள்ளாவிட்டாலும் ஆசிய கிண்ணப் போட்டி திட்டமிட்டபடி நடைபெறும் என்றார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போர்ட்ஸ் லிமிட்டெட்,207,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 09-03-1986

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ 60/N/86

# விளையாட்டரங்கு

## பொன் அணிகள் 'போர்' வெற்றி தோல்வியில்லை

### விறுவிறுப்பாக முடிவடைந்த ஆட்டம்

— விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கிரிக்கெட் குழுக்களுக்கிடையிலான 'பொன் அணிகள் போர்' (Battle of the Gold) ஆட்டம் நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் சரிந்து கவிழ்ந்த சென் பற்றிக்ஸ் அணி, பின்னர் சமாளித்து விளையாடி ஒருவாறு ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தது.

இறுதி நேரத்தில் மிக வேகமாக ஓட்டங்களைக் குவித்து அதன் மூலம் ஆட்டத்தில் வெற்றி பெறக் கிடைத்த சந்தர்ப்பத்தைவட்டுக்கோட்டை அணி கோட்டைவிட்டது.

முதலாம் நாள் (வெள்ளிக்கிழமை) ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் அணி 40 ஓட்டங்களுக்குள் தனது முதல் இன்னிங்ஸ் விக்கெட்டுக்கள் அனைத்தையும் அடுத்தடுத்து இழந்து சரிந்தது.

முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களின் அபாரப் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறினார்கள் சென். பற்றிக்ஸ் வீரர்கள்.

என். நித்தியரஞ்சன் 17 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தியமை சிறப்பு அம்சமாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணித்தலைவர் ஜி. இராகவன் ஒன்பது ஓட்டங்களுக்கு3விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ரி. ஆர். பத்திநாதர் 10 ஓட்டங்களும், என். குணேஸ்வரன் 11ஓட்டங்களையும் பெற்றனர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் அணி தனது முதல் இன்னிங்ஸில் 122 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஆர். குலசிங்கம் 29, அன்ரன் ராஜகாரியர் 22, எஸ் விஜயகுமார் 17, நோபின் சுரேந்திரன் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பி. ஆதவன் 40 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸ் சரிவினால் ஏற்பட்ட இழப்பைக் கவனத்தில் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை நிதானமாக விளையாடியது சென் பற்றிக்ஸ் அணி.

227 நிமிடங்கள் துடுப்பெடுத்தாடிய பற்றிக்ஸ் வீரர்கள், தமது இறுதி விக்கெட்டை இழந்த போது இரண்டாவது இன்னிங்ஸில் 167 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜி இராகவன் 47 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து ஐம்பது நிமிடங்களில்– 13 ஓவர்களில் – வெற்றி பெறுவதற்கு 86 ஓட்டங்களைபெறவேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்தது யாழ்ப்பாணக் கல்லூரி.

மின்னல் என ஓட்டங்களைக் குவிக்க முயன்ற போதும் ஆட்டம் குறிப்பிட்ட நேரத்தில் நிறுத்தப்பட்டபோது வெற்றி பெறத் தேவையான ஓட்டங்களை அவர்களால் பெற முடியவில்லை.

யாழ்ப்பாணக் கல்லூரி அணியினால் 3 விக்கெட் இழப்புக்கு 63 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

யாழ்ப்பாணக் கல்லூரி அணித்தலைவர் ஜி இராகவன் ஆட்டத்தின் சிறப்பு ஆட்டக்காரராகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்துறை வல்லுநர் ஆகிய இரண்டு பரிசில்களும் சென் பற்றிக்ஸ் அணித் தலைவர் எஸ். ஏ. கிளஸ்ரனுக்கு வழங்கப்பட்டது.

சென் பற்றிக்ஸ் விக்கெட் காப்பாளர் ஏ ரி.ஏ. செல்வராஜா சிறந்த பந்து தடுப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. எஸ். உமாகாந்தன், திரு. ஆர். செல்வரட்ணம் ஆகியோர் 'பொன் அணிகள் போர்' ஆட்டத்திற்கு மத்தியஸ்தம் வகித்தார்கள்.

கிரிக்கெட் பருவகாலத்தின்

## முதலாவது செஞ்சுரி 'சென்ட்ரல்' ரெறிமகான் சாதனை

### யூனியன் கல்லூரி அணி சரிந்தது

யாழ்ப்பாணத்தில் தற்போது நடைபெற்று வரும் கிரிக்கெட் பருவகால ஆட்டங்களின் முதலாவது செஞ்சுரியை யாழ் மத்திய கல்லூரி வீரர் ஜி. ரெறிமகான் நேற்று அடித்தார்.

நேற்று நடைபெற்ற யூனியன் கல்லூரிக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டத்தின் போதுதான் அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டினார்.

இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 9 விக்கெட் இழப்புக்கு 225 ஓட்டங்களைப் பெற்றது.

ஜி. ரெறிமகான் 102, ஈ. பிரபாகரன் 21, எஸ். விஜயநாதன் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

றமணன் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் குலேந்திரன் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

யூனியன் கல்லூரி அணி 93 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்ததனால் ஆட்டத்தில் தோல்வியடைந்தது.

யூனியன் வீரர் சதானந்தன் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 58 ஓட்டங்களைப் பெற்றார்.

குகனேந்திரன் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், விஜயநாதன் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

## கொக்குவில் இந்து வெற்றி! யாழ் இந்து தடுமாறியது!!

### நீண்டகால அனுபவம் மிக்க வீரர்கள் சாதனை

யாழ்ப்பாணம், மார்ச்.9

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கிரிக்கெட் அணிக்கு இரண்டாவது தோல்வி.

இம்முறை கொக்குவில் இந்துக் கல்லூரியிடம் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டத்தில் தடுமாறிப் போனது யாழ். இந்து அணி.

இந்த ஆட்டம் யாழ் இந்து விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

முதலில் யாழ். இந்து அணி துடுப்பெடுத்தாடியது.

யாழ் இந்துவின் துடிப்புள்ள இளம் வீரர்களினால் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் விளையாடும் அனுபவமிக்க வீரர்களின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களுக்கு முன்பாக 36·4 ஓவர்களில் 108 ஓட்டங்களைப் பெற்று சரிந்தது யாழ் இந்து அணி.

எஸ் ரவிக்குமார், கே. புவனேந்திரன் ஆகியோர் நிதானமாக நின்று விளையாடி முறையே 22, 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

கொக்குவில் அணியின் தரப்பில் மதிதரன் 9ஓவர்கள் பந்து வீசி 24ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

கிருபைநாதன் 8·4 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கும்—

திருத்தெய்வீகன் 8 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கும் தலா 3விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

கொக்குவில் இந்து 25 1 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 109ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் 6 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

மதிதரன் 20, மோகன் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களைப்பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org